விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 153 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 07 சனிக்கிழமை (21.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

9ஆம் திகதி வன்முறை

## நாமல் ராஜபக்ஷவிடம் சிஐடி வாக்குமூலம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி அலரி மாளிகை வளாகம், காலிமுகத் திடல் பகுதிகளில் ஏற்பட்ட அமைதியின்மை சம்பவம் தொடர்பாகவே வாக்குமூலம் பெறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது

நேற்று பிற்பகல் 4 ▷15

நாட்டின் தற்போதைய நிலை



சமூக ஊடகங்களில் பலரால் பகிரப்பட்ட படம்...

வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு

## முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குங்கள்

யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் வைத்தியர் யமுனாநந்தா




(யாழ்ப்பாணம்)

வைத்திய சேவை அத்தியாவசிய சேவையாக உள்ளமையால் வைத்திய சாலை உத்தியோகத்தர்களுக்கு எரி பொருள் வழங்குவதில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ▷15

ஹரீன், மனுஷ, நிமல், சுசில் உட்பட

# 9 பேர் அமைச்சர்களாக நேற்று பதவியேற்பு



ஹரீன் மனுஷ சுசில் நிமல் ஸ்ரீபால டி சில்வா

*(கொழும்பு) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கட்சியைச் சேர்ந்த ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார மற்றும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நிமல் ஸ்ரீபால டி சில்வா மற்றும் கோட்டாவால் அமைச்சுப் பதவியில் இருந்த நீக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்த உட்பட 9 பேர் நேற்று அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய் தனர்.*

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## பாராளுமன்றில் மதிய உணவு இடைநிறுத்தம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற உணவகத்தில் மதிய உணவு வழங்குவதை நிறுத்துவதற்கான நடவடிக்கை குறித்து அவதானம் செலுத்தப்படவுள்ளதாக சபாநாயகர் மகிந்த ▷15

ஹரீன், மனுஷ


## கட்சியிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் ஐக்கிய மக்கள் கட்சியின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படு ▷15

## விவசாயத்துறையை வலுப்படுத்தல்; உணவு பாதுகாப்பை உறுதி செய்தல்

ஐ.நா பிரதிநிதிகளுடன் பிரதமர் ரணில் கலந்துரையாடல்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிஹனா சிங்கர் ▷15

## யாழ்.ஆரியகுளத்தில் படகு சவாரி ஆரம்பம்



15ஆம் பக்கம் பார்க்க

கொழும்பு, கம்பஹாவுக்கு

## எரிவாயு சிலிண்டரை விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்கு எரிவாயு சிலிண்டரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் தொடர்பில் பொது நிறுவனங்களுக்கான குழு (கோப் குழு) லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு ஆலோசனையொன்றை வழங்கியுள்ளது.

அதன்படி, 60 சத ▷15

## இனி ஒருபோதும் பாராளுமன்றத்தில் பணியாற்றப் போவதில்லை

முன்னாள் அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

இனி ஒருபோதும் பாராளுமன்றத்தில் பணியாற்றப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரை யாற்றிய அவர், நான் இந்த பாராளுமன்றத்தை மீண்டும் பார்க்க மாட்டேன். எனக்கு இது தேவையில்லை.

இவ்வாறான சூழ ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 31 . 08 . 1937

மறைவு 21 . 05 . 2017

அமரர்

## திருமதி சின்னையா பொன்னு

அன்பு பாசம் பரிவு மூன்றுமே அம்மா
தான்பசி கிடந்தாலும் பிள்ளை பசி தாங்காதவள் அம்மா
குடும்ப விளக்காக குலவிளக்காக ஒளிதந்து கண்ணை இமை காப்பது
போல் எமைக் காத்த காவல் தெய்வமே

பாசத்தின் இமயமே நேசத்தின் இதயமே உதய ஞாயிறே

கல்வி எனும் அறிவுக் கண் திறக்க வாழ்வு சிறக்க சிறகடித்து சிறகடித்து பறந்து பறந்துழைத்த தாய்ப் பறவையே தாள் பணிகிறோம். உன் ஐந்தாண்டு நினைவை ஏத்தி ஏந்துகிறோம் எம்மை ஆளாக்கிய தெய்வமே மீளா நினைவில்...

(C-4348)

உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# சார்தாம் யாத்திரை பத்திரி, கேதார் யாத்திரை

நாட்கள் : 12 ஆரம்பம் : 20.06.2022

செல்லுமிடங்கள் :

பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, ஹரித்துவர், ரிஷிகேஸ், சென்னை

விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க

S.ராஜன் கைபேசி : 077 736 2154

(C-4347)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண் மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பார்மசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்

காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

077 814 7389, 077 241 7589 - ஜெயம்

(11458)

## எரிபொருள் இன்றுமுதல் தரையிறக்கம்

(கொழும்பு)

மற்றுமொரு டீசல் மற்றும் பெற்றோல் தொகையினை தரையிறக்கும் பணிகள் இன்று முதல் மீள ஆரம்பிக்கப்படும் என விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த இருதினங்களில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(ம)

# அறிவித்தல்

எமது மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் 20.05.2022 அன்று நடாத்தப்பட இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நிகழ்வானது நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 15.09.2022 இற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை ஆதரவாளர்கள் அனைவருக்கும் தயவுடன் அறியத்தருகின்றோம்.

தலைவர்

(11456) ஊழியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்

# மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1980 இல் பிறந்த சதயம் 1 ஆம் பாதம், Accounts Assistant சகல வசதிகளும் உடைய மணமகனுக்கு மணமகள் தேடுகின்றோம்.

(11419)

077 367 1062

# மரண அறிவித்தல்



## திருமதி புவனேஸ்வரி பொன்னம்பலவாணர்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பொன்னம்பலவாணர் அவர்கள் நேற்று (20.05.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் காமாட்சி அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலவாணர் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, மங்கையற்கரசி, தில்லைராஜேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம், ஷியாமளா அருண்மொழித்தேவர், கந்தையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பரமகுருநாதன், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி மற்றும் இந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மங்கையற்கரசி, ஞானாம்பிகை, வடிவாம்பிகை, அருண்மொழித்தேவர் ஆகியோரின் அண்ணியும் Dr. மயூரேசனின் (வைத்திய நிபுணர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை) பாசமிகு சிறிய தாயாரும் திவ்யா - செந்தூரன், சௌம்யா, தனயா, விதுயா ஆகியோரின் பெரிய தாயாரும் லாவண்யா மயூரேசன், செந்தூரன், மாதங்கி, நர்த்தனன், வித்தகன், சுபாங்கி, காலஞ்சென்ற ஞானபூரணி மற்றும் கணேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.05.2022) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 155, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

077 169 8348

குடும்பத்தினர்

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் சரவணமுத்து குணராஜா

(அன்னார் மண்டைதீவு கிராம சபை, இணக்கசபை முன்னாள் உறுப்பினரும் புகையிலை வர்த்தகருமாவார் )

மண்டைதீவு - வேலணை மேற்கு

" படைத்ததை மீளப்பெறும் இறைவன் நினைவுகளை என்றும் அழிப்பதில்லை"

கடந்த 22.04.2022 வெள்ளிக்கிழமை திருநெல்வேலியில் இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் அமரர் சரவணமுத்து குணராஜா அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேர்டியாகவும் தொலைபேசி, தொலைநகல் வாயிலாகவும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள், மலர்வளையங்கள் மூலமாகவும் மலர்மாலைகள் சாத்தியும் அஞ்சலி செலுத்தி ஆறுதல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(11421)

தயவுசெய்து இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

03 ஆம் ஒழுங்கை, [illegible] வீதி, திருநெல்வேலி.

தகவல் :
செல்லையா திருநாவுக்கரசு
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய நெருக்கடிக்குள் இலங்கை உதவ முன்வந்துள்ள ஜி-7 நாடுகள்

**(கொழும்பு) உலக வல்லரசுகளின் அமைப்பான ஜி-7 நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளன.**

உலக வல்லரசுகளின் அமைப்பான ஜி-7 நாடுகளின் நிதியமைச்சர்களது மாநாடு ஜேர்மனியில் இடம்பெறுகிறது.

அந்த மாநாட்டில் இலங்கை பெற்றுள்ள கடன்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடன்களை திருப்பிச் செலுத்துவதை இடைநிறுத்தியுள்ள நிலையில், இலங்கைக்கான உதவிகளை வழங்க ஜி-7 நாடுகள் ஊக்குவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சர்வதேச நாணய நிதியத்துடனான வினைத் திறனான பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

## 1.5 மில்லியன் டொலர்களை வழங்குகிறது ஜப்பான்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்திற்கு உதவுவதற்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை (ரூபா 600 மில்லியன்) வழங்குவதாக ஜப்பான் அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இந்த நிதியானது ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகள் மற்றும் ஆதரவு தேவைப்படும் குடும்பங்களுக்கு உணவு உதவி வழங்குவதற்கு பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி உயர்வு

(கொழும்பு)

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி சற்று உயர்வடைந்துள்ளது.

இந்த நிலையில் இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு பெறுமதி 354.48 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதே சமயம் டொலரொன்றின் விற்பனை பெறுமதி 364.45 ரூபாவாக பதிவாகியுள்ளது. (நி-6)

## கட்சியின் தீர்மானத்தை புறந்தள்ளி அமைச்சு பதவியேற்றார் நிமல்

### மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

"கட்சியின் தீர்மானத்தை மீறியே நிமல் சிறிபால டி சில்வா அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளார்" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

"சர்வகட்சி இடைக்கால அரசே எமது யோசனையாக இருந்தது. தேசிய நிறைவேற்று சபையை நிறுவுமாறு கோரியிருந்தோம். ஆனால், தற்போது பழைய ஆட்சிக்கே புத்துயிர் கொடுக்கப்படுகின்றது. இதனால் மக்கள் நம்பிக்கையை இழப்பார்கள்.

அரசுக்கு ஆதரவு வழங்குவது எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருந்தது.

எனினும், அந்தத் தீர்மானத்தை மீறியே எமது கட்சி உறுப்பினர் அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளார்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

## வாகனங்களின் தாங்கிகளுக்கு மட்டுமே பெற்றோல் விநியோகம்

### லங்கா ஐ.ஓ.சி அறிவிப்பு

(கொழும்பு)

வாகனங்களின் எரிபொருள் தாங்கிகளுக்கு மட்டுமே நேரடியாக பெற்றோல் விநியோகிக்கப்படும் என லங்கா ஐ.ஓ.சி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தமது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து கலன்கள், பீப்பாய்கள் அல்லது போத்தல்களில் பெற்றோல் வழங்கப்படாது என லங்கா ஐ.ஓ.சி தெரிவித்துள்ளது. (நி-6)



ஹட்டன் நகரிலுள்ள சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையங்கள் முன்பாக, பல நாட்களாக நீண்ட வரிசைகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு வெற்றுச் சிலிண்டர்கள்.

## விசுவமடுவைச் சேர்ந்த ஒருவர் 'கோட்டா கோ கம' நோக்கி துவிச்சக்கரவண்டியில் பயணம்



(தருமபுரம்)

காலி முகத்திடலில் இடம்பெறும் கோட்டா கோ கம எனும் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக நேற்று விசுவமடு சந்தியில் இருந்து 32 வயதுடைய இராசரத்தினம் ஜனகவர்மன் என்பவர் காலிமுகத்திடலை நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

நாட்டு மக்களின் நலன் கருதியும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும் குறித்த பயணம் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார். நான்கு நாள் பயணமாக குறித்த பயணத்தை ஆரம்பித்துள்ளதாகவும் . மூவின மக்களும் பொலிஸாரும் தனது பாதுகாப்பை உறுதிபடுத்துமாறும் தெரிவித்துள்ளார். (4-6-316)

## மரக்கறிகள் விலை 60 சதவீதத்தினால் உயர்வு

(கொழும்பு)

மரக்கறி வகைகளின் விலைகள் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் தற்போது 60 சதவீதத் தினால் அதிகரித்துள்ளது.

தக்காளி கிலோ ஒன்றின் விலை தற்போது 700 ரூபா வரையில் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார மைய ஒன்றியத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பச்சை மிளகாய் கிலோ 650 ரூபா முதல் 700 ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# 'இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே' கனடா தீர்மானம் தொடர்பில் இலங்கை அதிருப்தி

(கொழும்பு)

இனப்படுகொலை தொடர்பில் கனேடிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை தினமாக கனேடிய பாராளுமன்றம் அங்கீகரித்தமை வருத்தமளிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இன அழிப்பு இடம்பெற்றதாகக் கூறி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் உள்ளடக்கங்களை முற்று முழுதாக நிராகரிப்பதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தொடர்பிலான கனேடிய அரசாங்கத்தின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டுக்கும் இந்தத் தீர்மானத்திற்கும் முரண்பாடு உள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட போரின் போது நாட்டின் உண்மையான நிலைமைகள் குறித்து கனடாவிற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் யுத்தம் நிறைவிற்கு வந்து 13 ஆண்டுகளில் நல்லிணக்க முனைப்புக்களில் பாரியளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான அரசியல் நோக்கமுடைய சிறுபான்மை புலம்பெயர் சமூகத்தினர் மாத்திரமே இனவழிப்பு என்ற பதத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

நாட்டில் இனவழிப்பு இடம்பெற்றதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய நாடுகள் அமைப்பு கூறவில்லை.

பிழையான வழிகாட்டல்களுக்கு கனேடிய பாராளுமன்றம் இடமளித்திருப்பது வருத்தமளிப்பதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

* உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சிகள்
* மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 21.05.2022 சனிக்கிழமை தொடக்கம்
27.05.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4350)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309


## குஜராத்தை வீழ்த்தியது பெங்களூர்

ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 67 ஆவது லீக் போட்டியில், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சிறப்பான வெற்றியை பதிவுசெய்து ள்ளது.

மும்பையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப் போட்டியில், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் குஜராத் டை டன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் டைடன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் டைடன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 168 ஓட்ட ங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து 169 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலு க்கு களமிறங்கிய றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, 18.4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது. (4)

### நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

## எவ்.எக்ஸ்.அன்ரன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளரும் சிறந்த எழுத்தாளரும் நாடக ஆசிரியருமான எவ்.எக்ஸ்.அன்ரன் நேற்றுக் காலமானார்.

மிருசுவிலைச் சொந்த இடமாகவும் மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட எவ்.எக்ஸ். அன்ரன் கட்டுரை ஆசிரியர், மொழி பெயர்ப்புக் கட்டுரையாளர், நாடக ஆசிரியர் எனப் பல்பரிமாணங்களில் தன் ஆளுமையை வெளிப்படுத்தியவர்.

"அக்னி" என்ற புனைபெயரில் கட்டுரைகளை எழுதி வந்த இவர், **இது நம்ம கதைகள், சொல்ல மறந்த கதை** ஆகிய எழுத்தாக்கங்களை வலம்புரி நாளிதழில் எழுதி வந்தார்.

இவரின் மறைவு குறித்து கல்விச் சமூகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

இவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-)

## R.S. நடராஜா காலமானார்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் R.S. நடராஜா(வயது-89) நேற்று கொழும்பில் காலமானார்.

R.S.நடராஜா சிறந்த கல்விமானும் சிறந்த புத்திஜீவியும் ஆவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான தகவல் பின்னர் அறிவிக்கப்படும். (ம-7)


**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் உஷன் பகுதியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய கூலியாட்கள் தேவை.


தொடர்பு (C-4349)

076 760 0403, 077 592 5371


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2620

**பிரியந்தன்**

மான் செய்வது எப்படி
தேவையான பொருட்கள் கடிக்காத நாய் 1
வெள்ளை பெயின்ட் சின்ன டப்பா 1
இல்லாட்டி கையை முக்கி கூட போடலாம்



**சானு**

தகப்பனின் வருகைக்காக வாசலில் தவமிருக்கும் மகளை விட அழகாய் காட்சியளிப்பதில்லை எந்த தேவதையும்



**றியாஸ்**

இதுவும் கடந்து போகும் என்ற தத்துவத்தை எளிமையாக சொல்லி விடலாம்...!! ஆனால் வாழ்க்கையில் சில நிமிடங்களை கடப்பது அவ்வளவு சுலபம் அல்ல..!!

**குமார்**

அண்ணே அங்க பாருங்க Breaking News



இருடா!! எதுட விலைய அதிகரிச்சானுகளோ தெரியல எனக்கும் ஒரு மாதிரியாத்ததான் இருக்கு

**சுபத்ரா**


பிரண்டை துவையல் பண்ணி சாப்டா உடம்புக்கு நல்லது நமக்கு வேற நிறைய பிரண்ட இருக்காங்க



அதுல எந்த பிரண்டை துவையல் பண்ணி சாப்பிடறது என்று ஒரே குழப்பமா இருக்கு

**பாஸ்கர்**

கடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார் நீ எத்தனை வலிமையானவள் என்பது உனக்குத் தெரியும் !!!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி... www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். ... facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனை ரூபாவில் மீளளிக்கலாம் இந்திய மத்திய வங்கி சலுகை

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு நிதியளிப்பதற்காக ஸ்டேட் பேங்க் ஒஃப் இந்தியா மூலம் இலங்கைக்கு வழங்கப்பட்ட 1 பில்லியன் டொலர் காலக் கடனை ரூபாய் அடிப்படையில் செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்திய மத்திய வங்கியான ரிசர்வ் வங்கி நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய வங்கி, அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறை உடனடியாகவே நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமையான ஏற்பாட்டின் படி, இந்தக் கடன் மீள் செலுத்துகை டொலர், யூரோ அல்லது யென் நாணயங்கள் மூலமே செலுத்தப்படுதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்.

## இராசரத்தினம் பஞ்சலிங்கம்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 21.05.2022 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் எதிர்வரும் 23.05.2022 திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்விற்கு தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இராஜபாதை வீதி,
கோப்பாய்.

(11446)

தகவல்
குடும்பத்தினர்.

# இராசிபலன்

21.05.2022
வைகாசி 07, சனிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.30 மணிவரை

உத்தராடம் காலை 6.19 மணிவரை
திருவோணம் பின்னிரவு 4.58 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை

இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சந்திராஷ்டமம் - திருவாதிரை

வளவன்




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள்.




வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுவாரசியங்கள் கூடும்.




ஆழ்ந்த சிந்தனையுண்டு, கௌரவமிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம் , போசன நன்மையுண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும்.




சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.




ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக்குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.




மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.




தாழ்ந்த சுபாவமுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.




உங்களின் கருத்துக்களை மற்றவர்கள் ஏற்று நடப்பார்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

உனது உடலும் உயிரும் நலமுடன் வாழ உன் பாவத்தை விட்டுவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு சிலிண்டர் வழங்கக் கோரி வீதி மறித்து மக்கள் போராட்டம்

(குருமன்காடு)

**வவுனியாவில்எரிவாயு கோரி ஏ9 வீதியினை வழிமறித்து நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமையினால் அப்பாதையூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்திருந்தது.**



வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாகவுள்ள குறித்த எரிவாயு விநியோகஸ்தர் நிலையத்தில் அதிகாலை முதல் எரிவாயு பெற வரிசையில் நின்ற மக்களுக்கு எரிவாயு வழங்கப் படமாட்டது என தெரிவித்த நிலையில், கோபமுற்ற மக்கள் ஏ9 வீதியில் எரிவாயு சிலிண்டர்களை வைத்து போராட்டத்தில ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்கு இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வரவழைக்கப் பட்டதுடன், பொலிஸார் வீதியிலிருந்த எரிவாயு சிலிண்டர்களை அகற்றியதுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் அகற்றினர். இதன்போது பொலிஸாருக்கும், பொது மக்களுக்கிடையே கடும் தர்க்க நிலையும் ஏற்பட்டது. பின்னர் மக்களை அங்கிருந்து செல்லுமாறு பொலிஸார் தெரிவித்ததையடுத்து பொதுமக்கள் வெளியேறிச் சென்றனர். (4-6-250)

# கடும் காற்று காரணமாக யாழில் 10பேர் பாதிப்பு

## ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த புதன்கிழமை வீசிய காற்று காரணமாக 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டதோடு ஒருவர் உயிரிழந்துள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார். யாழில் வீசிய கடும் காற்றினால் கோப்பாய், நல்லூர், காரைநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. அதன்படி, கோப்பாய் ஜே/286 கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர், நல்லூர் ஜே/97 கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும், காரைநகர் ஜே/41 கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும் இவ்வாறு பாதிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(4-6-33)

# வடமாகாண கல்வித் திணைக்களத்தின் "e" கற்றல் மென்பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாணவர்களின் சுய கற்றலை மேம்படுத்தும் வகையில் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களுக்குரிய பிரதான பாடங்கள், சமூக விஞ்ஞான பாடங்கள், அழகியல் பாடங்கள், சுகாதாரமும் உடற்கல்வி பாடங்களுக்காள மற்றும் க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பாடங்களுக்கான மீட்டல் பயிற்சிகளுடன் கூடிய இலத்திரனியல் கற்றல் மென்பொருட்கள் வடமாகாணத்தின் Imdmunit youtupe தளத்தில் தொடர்ச்சியாக பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. மாணவர்கள் அவற்றினை பார்வையிட்டு பயன்பெற வழிப்படுத்துமாறு பாடசாலை அதிபர்கள், உரிய பாட ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

பூரணப்படுத்தப்பட்ட பாடங்களின் இறுவெட்டுக்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பாடங்கள் பூரணப் படுத்தப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் மேலும் இலத்திரனியல் கற்றல் மென்பொருட்கள் தேவைப்படுவோர் அவற்றை ஆசீர்வாதப்பர் வீதியில் உள்ள யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயத்தில் இயங்கும் வடமாகாணத்தின் LMDM அலகில் Pen drive இனைக் கொடுத்து இலவசமாக பிரதி செய்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

# அரசியல் நிலைமைகள் தொடர்பில் இணையவழி உரையாடல்கள்

(குப்பிழான்)

உரிமைக் குழுமத்தின் ஏற்பாட்டில் "புழுதி" சமூக உரிமைகளுக்கான அமைப்பின் அனுசரணையில் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பான இணைய வழியிலான இரு உரையாடல் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேரா சிரியர் கலாநி தி.கே.ரி.கணேசலிங்கம் "இலங்கையின் தற்போதைய சூழலில் தமிழ் மக்களின் மூலோபாயம், தந்திரோபாயங்கள் எவ்வாறு அமைதல் பாயங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும்?" எனும் தலைப்பிலும், அரசியல், சமூக ஆய்வாளர் எம்.நிலாந்தன் "தென்னிலங்கைப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கமும் விளைவும்" எனும் தலைப்பிலும் கருத்துரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை, குறித்த உரையாடல்கள் நிகழ்வில் Meeting ID: 893 642 6911, passcode: 1122 ஊடாக ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-6-18)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் (தாய்ச்சங்கம்) 2022/2023 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக பொ.கமலநாதன், செயலாளராக கா.சசிகரன், பொருளாளராக ச.பிரதாபன், உபதலைவராக ம.ஞானசம்பந்தன், வி.தயாபரன், திருமதி. க.தேவராஜா, உபசெயலாளராக கலாநிதி சீ.செல்வநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப் [illegible] செய்யப்பட்டனர. (4-6)

# நெடுந்தீவு கடற்போக்குவரத்து தொடர்பில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவுப் பிரதேசத்திற்கான கடற்போக்குவரத்து மற்றும் அதனுடன் கூடிய பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்குச் சாத்தியமான தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக் கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது. வடதாரகைப் படகு பழுதடைந்துள்ள நிலையில் அதற்கு மாற்றீடாகப் போக்குவரத்துப் படகுகளைப் பயன் படுத்தல் மற்றும் கடற்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற படகுகளுக்கான சான்றிதழ்களைப் பெறுதல், போக்குவரத்துக்கான நேர அட்டவணைகளை ஒழுங்கமைத்தல், படகுச் சேவைகளின் போது பயணிகளுக்குப் பாதுகாப்பு அங்கி அணிதல் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குதல் தொடர்பாகவும் மேற்படி கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-18-33)

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருதுக்காக இருவர் தெரிவு





(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகனின் 61 ஆவது பிறந்த நாள் அறநிதிய விழா எதிர் வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு 2022 ஆம் ஆண்டுக்கான இளைய தலைமுறை ஆற்றலாளர் விருதுக்காக அறநிதியச்சபை கூடி இருவரைத் தெரிவு செய்துள்ளது. அந்த வகையில் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.சின்னையா கருப்பையா நவரட்ணராஜா மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் இராமச்சந்திரன் இரமணன் ஆகியோரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட இரு ஆற்றலாளர்களும் இந்த ஆண்டுக்கான அறநிதிய விழா நாளில் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-6-18)



யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி கால்கோள்விழா கல்லூரியின் அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாவால் பதவி பறிக்கப்பட்டவர் ரணிலால் மீண்டும் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பதவி பறிக்கப்பட்ட சுசில் பிரேம ஜயந்தவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அமைச்சரவையில் முக்கிய அமைச்சை வழங்கியுள்ளார்.

பிரதமர் ரணில் தலைமையிலான அமைச்சரவையில் சில அமைச்சர்கள் நேற்று பதவியேற்றனர். பலத்த இழுபறிக்கு மத்தியில் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சில வாரங்களாக ரணில் நடத்திய தீவிர கலந்துரையாடலை அடுத்து இணக்கம் வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 9 பேர் அமைச்சரவை அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.


இந்நிலையில் கடந்த அமைச்சரவையில் இராஜாங்க அமைச்சராக சுசில் பிரேம ஜயந்த செயற்பட்டார். இதன் போது அரசாங்கத்தின் மோசமான நிலைமைப்பாடு குறித்து பகிரங்கமாக விமர்சித்திருந்தார்.

இதனால் கோபமடைந்த அப்போதைய நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, உடனடியாக அமைச்சு பதவியில் இருந்து வெளியேற்றுமாறு கோட்டாபயவுக்கு அழுத்தம் கொடுத்திருந்தார். அவ்வாறு செய்யத் தவறினால் அமைச்சரவை கூட்டங்களில் பங்கேற்கப் போவதில்லை எனவும் எச்சரித்திருந்தார்.

இதற்கு அடிபணித்த கோட்டாபய ராஜபக்ஷ, சுசில் பிரேம ஜயந்தவை அதிரடியாக பதவி நீக்கம் செய்தார். இந்நிலையில் நேற்று கல்வி அமைச்சராக பதவியேற்று அமைச்சரவையில் அங்கம் வகித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கையினை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மேற்கொண்டிருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (நி-6)

# தெமோதரை வனப்பகுதியில் தீ 40 ஏக்கர் வனப்பகுதி தீக்கிரை



(கொழும்பு)

தெமோதரை புகையிரத நிலையத்தைச் சார்ந்த வனப் பகுதியில் இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டதால் 40 இற்கும் மேற்பட்ட ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையானது பிரதேச மக்கள் தீயை கட்டுப்படுத்துவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் வனப்பகுதி முற்றாக தீக்கிரையானது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்த சிறப்புமிக்க புகையிரத நிலையமாக தெமோதரை காணப்படுகின்றது.

இந்த புகையிரத நிலையத்தின் அமைப்பிற்கு இந்த மலைத் தொடர் பெரிதும் அழகான தோற்றத்தை அளிக்கின்றது. இனந்தெரியாதவர்களால் தீவைக்கப்பட்டமையால் இந்த மலைத் தொடரில் காணப்பட்ட பாரிய மரங்கள்,பசுமையான தோற்றம் அழிவடைந்து உள்ளது.

எமது சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கும் பொது மக்களாகிய நாம் அவற்றை பாதுகாக்கும் கடமையில் இருந்து தவறி அவற்றை அழிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். (நி-6)

# இலங்கைக்கு உதவ முன்வந்தது மாலைதீவு

(கொழும்பு)

இலங்கை, கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முயற்சிக்கும் வேளையில் தமது நாடு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று மாலைதீவு உறுதியளித்துள்ளது.

இந்தநிலையில் இலங்கைக்கான நிவாரண உதவிகளை ஒருங்கிணைக்க அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் மாலைதீவு பாராளுமன்றத்தின் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாலைதீவு, தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்று ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலிஹ் தெரிவித்தார். (நி-6)

# பீப்பாய்களில் எரிபொருள் வழங்கிய எரிபொருள் நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் ரத்து

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நான்கு எரிபொருள் நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

விதிமுறைகளை மீறி கையிருப்பில் உள்ள எரிபொருளை கேன்கள் மற்றும் பீப்பாய்களுக்கு விநியோகம் செய்த நிலையிலேயே குறித்த நான்கு எரிபொருள் நிலையங்களின் அனுமதிப்பத்திரங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (நி-6)




**யாழ்.இராட்சியத்தின் இறுதித் தமிழ்த் தேசிய வைச மன்னன் 2 ஆம் சங்கிலியனின் 403 ஆவது சிரார்த்த தினவிழா அழைப்பு**

**இடம் :-** சங்கிலிய மன்னனின் சிலையடி, முத்திரைச் சந்தி, நல்லூர்
**காலம்:-** வைகாசி வளர்பிறை எட்டாம்நாள் (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை

**நிகழ்ச்சிகள்**

9.00 - 9.30 - சங்கிலிய மன்னன் சிலைக்கு மாலையணிவித்து, மலர் சொரிந்து அஞ்சலி செய்தல்.
9.30 - 10.30 - யமுனா ஏரிக்கு ஊர்வலமாகச் சென்று மலர்தூவி அஞ்சலி செய்தல்.
10.30-11.00 - விருந்தினர் உபசரிப்பு.
11.30-12.30 - கீரிமலை தீர்த்தக்கரையில் சிரார்த்தக் கிரியை செய்தல்
12.30-1.30 - அன்னதானம் - சிவபூமி மடம்.

- இலங்கைத் தீவின் 25 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் சிரார்த்தம் இடம்பெறும்.
- அணி திரண்டு வாரீர்! அஞ்சலி செய்வோம்.
- தமிழ்த் தேசிய சைவமக்களே! விழிமின்; எழுமின்; சைவம் காக்கப் புறப்படுமின்.

**விளம்பர அனுசரணை - தொழிலதிபர்.திரு.ந.திவாகர், அண்ணா தொழிலகம் இணுவில்.**

**திரு.N.P. ஸ்ரீந்திரன்**
**செயலாளர்,**
**சங்கிலிய மன்னன் நினைவுத் திருக்குழு**

(C-4346)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: சூரி 12 செவ் 1 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும் படித்த மணமகள்<br>தொ.இ: B/12686 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 52 சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: உயர்தரம் ஆங்கில அறிவுள்ளவர்<br>எதிர்பார்ப்பு: லண்டன் மட்டும்<br>தொ.இ:G/10366 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம் : அச்சுவினி 3<br>கி.பா: சூரி 4 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/12690 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 17 சூரி 6 செவ் 5 இல் உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BA.(Hons) ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில் மணமகன் திருமணமாகி குறுகிய காலத்தில் விவாகரத்தானவர்<br>தொ.இ:G/9774 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: சூரி 9 செவ் 10 இல் உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Ship Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/12691 | பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 45¾ சூரி 4 செவ் 2 இல்<br>உயரம்: 163 cm<br>தகைமை/தொழில்: BSc,Business Administration Accountant – Germany<br>எதிர்பார்ப்பு: ஜேர்மனி மட்டும்<br>தொ.இ:G/9798 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 51¼ சூரி 2 செவ் 1<br>உயரம்: 5'6'<br>தகைமை/தொழில்: (இத்தாலி PR) AAT,Civil Engineering படவரைஞர் supervisor (Italy) Nationality Applicant<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண் உள்நாடு அல்லது வெளிநாடு PR உள்ளவர்கள்<br>தொ.இ:B/12693 | பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 63½ சூரி 10 செவ் 7 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: SL ,CCMA Clinical Medical Assistant (அமெரிக்கா)<br>எதிர்பார்ப்பு: அமெரிக்கா, கனடா மட்டும்<br>தொ.இ:G/9811 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 51

### நான் வாழை அல்ல...! சவுக்கு மரம்!



வானொலிப் பேட்டி யொன்றில் நகைச்சுவை நடிகர் நாகேஷ் தன்னம்பிக்கைக்கு எடுத்துக் காட்டாக ஒரு கதை சொல்லி இருப்பார்

அதில் நாகேஷிடம் பேட்டியாளர் ஒரு கேள்வி கேட்பார். நியாயமாக உங்களுக்கு வர வேண்டிய நல்ல பெயர் மற்றவர்களுக்குச் செல்லும் போது உங்களுக்கு எப்படி இருக்கும்? என்று அதற்கு பதில் அளிக்கையில்,

நாகேஷ்: நான் கவலையே படமாட்டேன் சேர்.

ஒரு கட்டடம் கட்டும் போது,

சவுக்கு மரத்தை முக்கியமா வச்சு சாரம் கட்டி, குறுக்குப் பலகைகள் போட்டு,

அதன் மேல பல சித்தாள்கள் நின்னு, கைக்குக் கை கல் மாறி கட்டடம் உயர்ந்து கொண்டே போய் அது முடிந்த பிறகு, அந்தக் கட்டடத்துக்கு வர்ண ஜால வித்தைகள் எல்லாம் அடிச்சு,

கீழ இறங்கும் போது ஒவ்வொரு சவுக்கு மரமாக அவிழ்த்துக் கொண்டே வருவார்கள்.

கட்டடம் முடிந்து, கிரஹப் பிரவேசத்தன்று கட்டடம் கட்டுவதற்கு எது முக்கிய காரணமாக இருந்ததோ, அந்தச் சவுக்கு மரத்தை யார் கண்ணிலும் படாமல் பின்னால்,

எங்கயோ மறைத்து வைத்துவிட்டு, வேறெங்கேயோ வளர்ந்த வாழை மரத்தை முன்னால் நட்டு கிரஹப் பிரவேசம் நடத்தி அனைவரையும் வரவேற்பார்கள். அத்தனை பெருமையும் வாழை மரத்துக்குப் போய் விடும்.

இதில் உள்ள உண்மை என்ன தெரியுமா? அந்த வாழை மரம் மூன்று நாள் வாழ்க்கை தான் வாழும். ஆடு மாடுகள் மேயும். குழந்தைகள் பிய்த்தெடுப்பார்கள்.

பிறகு குப்பை வண்டியிலே போய்ச் சேரும்.


எங்கோ மூலையில் மறைந்து கிடக்கிறதே அந்தச் சவுக்கு மரம் கண்ணீர் விடுவதில்லை.

அடுத்த கட்டடம் கட்டுவதற்கு ஏணியாக தயார் நிலையில் என்றைக்கும் சிரித்துக் கொண்டேயிருக்கும்.!!!

"நான் வாழை அல்ல...! சவுக்குமரம்.!"

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampuri[illegible] எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## நேட்டோவில் இணையும் சுவீடன்-பின்லாந்துக்கு அமெரிக்கா ஆதரவு



(வோஷிங்டன்)

நேட்டோ உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பிக்கும் சுவீடன் மற்றும் பின்லாந்துக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் இந்த வாரம் மேற்கத்தேய பாதுகாப்பு கூட்டணியின் ஒரு பகுதியாக இருக்க தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்தன. இது ஐரோப்பிய புவி சார் அரசியலில் ஒரு பெரிய மாற்றத்தைக் குறிக்கிறது.

கூட்டணியில் சேர, இரு நாடுகளுக்கும் 30 நேட்டோ உறுப்பு நாடுகளின் ஆதரவு தேவை. ஆனால் நார்டிக் நாடுகளின் இந்த நடவடிக்கைக்கு துருக்கி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (நி-6)

## உக்ரை உணவை அமெ

(ஜெனிவா)

உக்ரைனுக்கு எதிர அமெரிக்க வெளிய சாட்டியுள்ளார்.

உக்ரைனிய துறைமுகங்களை முற்றுகையிட்டு அங்கிருந்து உணவு, தானியங்கள் ஏற்றுமதி செய்வதை ரஷ்யா தடுத்து வைத்துள்ளதால் உக்ரைனியர்கள் மட்டுமின்றி, உலகம் முழுவதும் உள்ள மில்லியன் கணக்கான மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றிய பிளிங்கன், உக்ரைனிய துறைமுகங்களை முற்றுகையிடுவதை நிறுத்துமாறு ரஷ்யாவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

## உக்ரைனுக்கு மேலும் இரட்டி

(டோக்கியோ)

ஜி-7 கூட்டமைப்பின் உறுப்பு நாடான ஜப்பான் உக்ரைனுக்கு பொருளாதார உதவியாக அறுநூறு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை உலக வங்கியினூடாக கையளித்துள்ளது.


கடந்த ஏப்ரல் மாதத்தில் ஜப்பான் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை உக்ரைனுக்கு கையளித்திருந்த நிலையில் தற்போது இதன் இரட்டிப்பு நிதியாக 600 மில்லியன் டொலர்களை கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிதி உதவி குறித்த



அறிவிப்பினை ஜப்பான் நாட்டு பிரதமர் பூமியோ கிஷ்டாட் நேற்று

## ஆடம்பர பொருட்கள் இறக்குமதிக்கு தடைவிதித்தது பாகிஸ்தான் அரசு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...னியர்களை வீழ்த்த முடியாததால்

# ...வ ஆயுதமாக பயன்படுத்தும் ரஷ்யா

## ...மெரிக்கா குற்றச்சாட்டு



...திரான போரில் உணவை ஆயுதமாக ரஷ்யா பயன்படுத்துவதாக
...ரியுறவுத்துறை அமைச்சர் அண்டனி பிளிங்கன் குற்றஞ்

உக்ரைனியர்களின் போர் ஆற்றலை, அவர்களது மன உறுதியை ஆயுதங்கள் மூலம் ரஷ்யாவால் வீழ்த்த முடியவில்லை.

இந்நிலையில் ஆயுதங்களால் செய்ய முடியாததை உணவை ஆயுதமாகப் பயன்படுத்தி செய்ய முடியும் என ரஷ்ய அரசாங்கம் நினைக்கிறது என அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் வலிந்த போரால் உணவு, தானியங்கள், சமையல் எண்ணெய், எரிபொருள் மற்றும் உரம் ஆகியவற்றின் விலைகள் சர்வதேச அளவில்கடுமையாக உயர்ந்துள்ளன.

உலகத்தின் கோதுமைத் தேவையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கை ரஷ்யாவும் உக்ரைனும் ஈடு செய்தன. சோளம், பார்லி, சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றின் முக்கிய ஏற்றுமதியாளராக உக்ரைன் உள்ளது.

ஆனால் போருக்குப் பின்னர் உக்ரைன், ரஷ்யாவில் இருந்து இவற்றைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் பெரும் பற்றாக் குறை மற்றும் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யர்கள் சரியான சூழ்நிலையில் உலகம் முழுவதற்கும் தேவையான உணவை உற்பத்தி செய்வதில் திறமையானவர்கள் என ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவ் தனது டெலிகிராம் சமூக வலைத்தளத்தில் எழுதியுள்ளார்.

ஆனால் ஒருபுறம் ரஷ்யா மீது பல நாடுகள் இணைந்து பைத்தியக்காரத்தனமான பொருளாதாரத் தடைகளை விதித்துவிட்டு, மறுபுறம் உணவை வழங்குமாறு கோருகின்றனர்.

நீங்கள் தடை விதிப்பீர்கள். ஆனால் நாங்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்றால் அது நடக்காது. நாங்கள் முட்டாள்கள் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கும் உணவு விநியோகம் குறைந்துள்ளது. விலைகள் கடுமையாக அதிகரித்து வருகின்றன. அதேநேரம் ரஷ்யாவின் தடைகளால் பயன்படுத்தப்பட முடியாமல் உக்ரைனிய களஞ்சியங்களில் சுமார் 20 மில்லியன் தொன் தானியங்கள் முடக்கப்பட்டுள்ளன என குறிப்பிட்டார்.

நிலைமை இவ்வாறிருக்கையில் ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து உணவு ஏற்றுமதியை மீண்டும் தொடங்கவும் உர உற்பத்தியை உலக சந்தைகளுக்கு கிடைக்கச் செய்யவும் அனுமதிக்கும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரேரஸ் முயற்சிகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ...டை நிதி உதவி



...6 உறுதிப்படுத்தியுள்ளமை
...ய குறிப்பிடத்தக்கது. (நி-6)

(இஸ்லாமாபாத்)

கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்ய பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது.

நிதிப்பற்றாக்குறை, அதிகரித்து வரும் பணவீக்கம், குறைந்து வரும் அந்நியச் செலாவணிக் கையிருப்பு மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை எனப் பல்வேறு பிரச்சினைகளை பாகிஸ்தான் எதிர்கொண்டுள்ளது .

இந்தநிலையில், நாட்டின் பொருளாதார நிலை குறித்து ஆய்வு செய்ய பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையில் கடந்த புதன்கிழமை விசேட கூட்டம் நடைபெற்றது.

அதில் அத்தியாவசியமற்ற மற்றும் ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்க முடிவு எடுக்கப்பட்டது. (நி-6)

## பாம் ஒயிலுக்கான தடையை நீக்கியது இந்தோனேசியா

(ஜகர்த்தா)

உலகின் மிகப்பெரிய செம்பனை எண்ணெய் (FARMOIL) உற்பத்தி செய்யும் இந்தோனேசியா, ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியுள்ளது.

இதன்படி, ஏற்றுமதிக்கு நாளை மறுதினத்தில் இருந்து தடை விலக்கப்படுவதாக ஜனாதிபதி ஜோகோ விடோடோ அறிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், 'உள்நாட்டில் செம்பனை எண்ணெய் விலை குறைந்து விட்டது. உள்நாட்டுத் தேவையை விடவும் அதிகமாக உற்பத்தி உள்ளது. எனவே செம்பனை எண்ணெய் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை இந்தோனேசியா நீக்குகிறது.

அடுத்து வரும் வாரங்களில் அதன் விலை குறைய வாய்ப்புள்ளது. செம்பனை எண்ணெய் தொழிலை நம்பி விவசாயிகள் உட்பட 17 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் நாட்டில் உள்ளனர். அவர்களின் நலன் கருதி நாளை மறுதினம் முதல் செம்பனை எண்ணெய் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்படுகிறது'.

இதனால், செம்பனை எண்ணெய் இறக்குமதி செய்யும் பல்வேறு நாடுகளிலும் அதன் விலை குறைய வாய்ப்புள்ளது எனத் தெரிகிறது.

இந்தோனேசியாவில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் தாவர எண்ணெயான செம்பனை எண்ணெய், அழகுசாதனப் பொருட்கள் முதல் சொக்லேட் வரை பரவலான பயன்பாடுகளுக்காக உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பெண் அறிவிப்பாளர்களின் முகங்களை மறைக்க வேண்டும்

### தலிபான்கள் உத்தரவு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில், தொலைக்காட்சிகளின் பெண் தொகுப்பாளர்கள் மற்றும் ஏனைய பெண் அறிவிப்பாளர்கள், தொலைக்காட்சி திரையில் தோன்றும்போது முகங்களை மறைக்கவேண்டும் என்று தலிபான்கள் உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமையன்று இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பெண்களும் பொது இடங்களில் முகத்திரை அணிய வேண்டும் அல்லது அவர்கள் தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னரே தற்போதைய உத்தரவு வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானில், பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படுகின்றன, ஆண் பாதுகாவலர் இல்லாமல் அவர்கள் பயணம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது மற்றும் பெண்களுக்கான மேல் நிலைப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தலிபான்களின் இந்த உத்தரவை கேட்டு, அதிர்ச்சியடைந்ததாக காபூலில் உள்ள உள்ளூர் தொலைக்காட்சி ஒன்றில் பணிபுரியும் பெண் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தமது பணிகளை நிறுத்தும் வகையில் கொடுக்கப்படும் அழுத்தம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாயை மூடிக்கொண்டு தம்மால் எவ்வாறு செய்திகளை வாசிக்க முடியும்? இந்த விடயத்தில் சர்வதேசம் தலிபான்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இந்தநிலையில் குறித்த புதிய ஆணை இன்று முதல் நடைமுறைக்கு வரும் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### எரிபொருள் தட்டுப்பாடு

# இ.போ.ச.முல்லைத்தீவு சாலை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

**(பனிக்கன்குளம்)**
**முல்லைத்தீவு மாவட்டத்தின் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்று பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.**

உரிய நேரத்துக்கு சேவைகளை வழங்க எரிபொருள் கிடைக்காமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் உரிய தீர்வு வழங்கப்படவில்லை என தெரிவித்து குறித்த பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.



குறித்த பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக பொதுமக்கள், அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சைகள் இடம் பெறவுள்ள நிலையில் உரிய போக்குவரத்து சேவைகள் இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு சாலையில் பேருந்துகளுக்கு எரிபொருள் சரிவர கிடைப்பதில்லை என்றும் உரிய சேவைகளை வழங்க முடியுமா என்ற நிலையில் உள்ளதாகவும் முல்லைத்தீவு சாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-281)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மரத்துடன் மோதியது


## இருவர் படுகாயம்



(தருமபுரம்)
கிளிநொச்சி புளியம்பொக்கணைப்பகுதியில் நேற்று புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து பரந்தன் நோக்கி பயணித்த கப் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டையிழந்த நிலையில் மரத்துடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இதன்போது கப் ரக வாகனம் முற்றாக சேதமடைந்ததுடன் வாகனத்தில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-316)

# புகையிரதம் மோதியதில் இரு பசு மாடுகள் பலி




(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆத்திகடி பகுதியில் புகையிரதம் மோதியதில் இரு பசு மாடுகள் உயிரிழந்துள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு இடம்பெற்றது. (4-6)

# முல்லையில் கடும் காற்று

## தீர்த்தக்கரை வேளாங்கண்ணி மாதா கோயில் சேதம்




(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீர்த்தக்கரை பகுதியில் நேற்று வீசிய கடும் காற்று காரணமாக தீர்த்தக்கரை வேளாங்கண்ணி மாதா கோயில் சேதமடைந்துள்ளது. குறித்த பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக கட்டுமானப் பணிகள் இடம் பெற்று வந்த தீர்த்தக்கரை வேளாங்கண்ணி மாதா ஆலயத்தின் கட்டடத்தின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளது. (4-6-281)

# கிரவல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற வழக்கின் சான்றுப் பொருளான 1375 கியூப் கிரவல் ஏல விற்பனையானது கடந்த 14 ஆம் திகதியன்று நடைபெறாது பிற்போடப்பட்ட நிலையில் ,மீளவும் குறித்த ஏல விற்பனை எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட மானுருவி ,ஒட்டுசுட்டான் (கருவேலங்கண்டல் கிராம உத்தியோகத்தர் பிரிவு) எனும் இடத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

# கரைச்சி பிரதேச சபை உறுப்பினரின் வர்த்தக நிலையம் மீது தாக்குதல்



(கண்டாவளை )
கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸார் மற்றும் உயரதிகாரிகளின் கவனதிற்குக் கொண்டு சென்ற சம்பவத்தையடுத்து நேற்று முன்தினம் இரவு கரைச்சி பிரதேசசபை உறுப்பினரின் வர்த்தக நிலையத்தின் கதவுகள், பொருட்கள் என்பவற்றுக்கு சேதம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

குறித்த விவசாய நிலங்களில் இடம்பெறும் மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறு நேற்றுமுன்தினம் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று உயர் அதிகாரிகளை சந்தித்து மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துமாறு கோரியிருந்தனர்.

இதனையடுத்து அன்றிரவு குறித்த விவசாய அமைப்புக்களின் பிரதிநிதியும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினருமாகிய மயில் வாகனம் நந்தகுமார் என்பவரின் [illegible] கட்டியவாறு மோட்டார் சைக்கிளில் சென்ற மூவர் அவரது [illegible]களை அடித்து சேதமாக்கியுள்ளனர். (4-6-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 200 | 360 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 200 | 300 |
| தக்காளி | 800 | 700 | 900 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 120 |
| கோவா | 260 | 240 | 260 |
| கரட் | 200 | 360 | 400 |
| பூசணி | 140 | 100 | 120 |
| புடோல் | 260 | 250 | 240 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 400 | 340 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 650 | 700 | 600 |
| வெண்டக்காய் | 200 | 200 | 280 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 180 |
| பயற்றங்காய் | 800 | 700 | 320 |
| லீக்ஸ் | 220 | 250 | 250 |
| பீற்றூட் | 350 | 250 | 400 |
| கறிமிளகாய் | 450 | 350 | 450 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 1000 |
| போஞ்சி | 600 | 650 | 480 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | 320 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 140 |
| தேசிக்காய் | 600 | 500 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 140 |
| வெங்காயப்பூ | -- | 650 | 320 |
| முள்ளங்கி | 100 | 180 | 280 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 200 | -- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2022-14.06.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்!



**நட்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான் சுக ஸ்தானத்தில் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். அதேநேரம் கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் சுக ஸ்தானத்திற்கு செல்லும்போது, ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் தனித்து இயங்க முற்படுவர். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு பொறுப்பு அதிகரிக்கும்.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 5, 12 இற்கு அதிபதியானவர் செவ்வாய். 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. எனவே விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் உறுதியாகும். பிள்ளைகளின் போக்கில் திடீர் மாற்றம் உருவாகலாம். வாங்கிய பூமியை விற்க நேரிடலாம்.

**புதன் வக்கிர நிவர்த்தியும் ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்கிர நிவர்த்தியாவதால் கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். எனவே உத்தியோகத்தில் பணி நிரந்தரமாகும்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார். 6, 11 இற்கு அதிபதியான சுக்கிரன், பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும்




பொழுது பிள்ளைகளின் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் விருப்ப ஓய்வு பெற்று, சுயதொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

**மகரச் சனியின் வக்கிர காலம்**

வைகாசி 11 ஆம் திகதி உங்கள் இராசிக்கு தனம் மற்றும் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பணப்புழக்கத்தில் தடை ஏற்படும். தொழில் மூலதனத்திற்கு செய்த ஏற்பாடு தாமதப்படும். மனக் கலக்கம் அதிகரிக்கும். பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பு குறையும். கடன்கள் வசூலாவது அரிது. திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். வெளிநாட்டில் இருப்பவர்கள் சொந்த ஊர் திரும்ப முடியாத அளவிற்கு பிரச்சினைகள் வரலாம். இம்மாதம் செவ்வாய்க் கிழமை தோறும் வராகி அம்மனை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உடல்நலனில் கவனம் தேவை. சுபச்செலவு அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் பிரச்சினை ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்.

விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் வேலை மற்றும் திருமணத்திற்கான வாய்ப்புகள் கைகூடும். சனியின் வக்கிர காலத்தில் சஞ்சலங்கள் கூடலாம். பணிபுரியும் இடத்தில் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

## எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்!



**கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்படும் மகர இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். தன ஸ்தானத்தில் செவ்வாயும், சகாய ஸ்தானத்தில் குருவும் சஞ்சரிப்பதால் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வருமானம் திருப்தி தரும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த காரியம் தாமதப்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படலாம். வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இக்காலத்தில் மருத்துவச் செலவு கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. தடைகளும், மனப் போராட்டமும் அதிகரிக்கும். வாங்கிய இடத்தை விற்கக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம்.

**புதனின் வக்கிர நிவர்த்தியும், ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். இந்த வக்கிர காலம் உங்களுக்கு இனிய காலம் தான். உத்தியோக மாற்றம் உருவாகலாம். மண வாழ்வில் இருந்த கருத்து வேறுபாடு அகலும். தன வரவிற்கு குறைவிருக்காது. வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். 6, 9 இற்கு அதிபதி புதன் 5 ஆம் இடத்திற்குச் செல்லும் இந்த நேரத்தில் நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். புதிய வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்வீர்கள். நீண்ட நாளைய சச்சரவுகள் மாறும்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன்,




வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார். இந்த கால கட்டத்தில் பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலம்.

**மகரச் சனியின் வக்கிர காலம்**

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், தனாதிபதியாகவும் விளங்கும் சனி பகவான், வைகாசி 11 ஆம் திகதி வக்கிரம் பெறுகிறார். அது அவ்வளவு நல்லதல்ல. உடல் நலத்தில் அச்சுறுத்தல் ஏற்படும். தடைகளை வென்று முன்னேறிச் செல்ல வேண்டிய நேரம் இது. குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தலைதூக்கும். உத்தியோகத்தில் பணி நீக்கம் ஏற்படலாம்.

மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகி, பல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். இம்மாதம் சனிக் கிழமை தோறும் சனிபகவானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

பணப்புழக்கம் நன்றாக இருந்தாலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும். கணவன் - மனைவி உறவில் பாசமும் நேசமும் குறையும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. சகப் பணியாளர்களால் திடீர், திடீரென பிரச்சினைகள் உருவாகும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலையும் ஏற்படலாம்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## குருட்டு யோசனை



(நேற்றைய தொடர்ச்சி)

அங்கும் போய் விசாரித்து விட்டு மறுபடியும் அந்த ஆள் பொன்னுசாமியின் வீட்டிற்கே திரும்பி வந்து "எங்கே யாரைக் கேட்டாலும் இதுதான் பொன்னுசாமியின் வீடு என்கிறார்கள். நீங்களோ இது அவர் வீடு இல்லை என்கிறீர்கள். என்ன செய்வது? ஒரு முக்கியமான தகவலை அவரிடம் சொல்ல வேண்டும். அவர் வீட்டையே கண்டுபிடிக்க முடியவில்லையே. என்ன செய்வேன்?" என்று கூறிக் கொண்டே நின்றான்.

அப்போது பொன்னுசாமி "முக்கியமான தகவலா? என்ன அது? நான் எண்ணவோ யோசனையில் இது பொன்னுசாமியின் வீடல்ல என்று சொல்லி விட்டேன். நான் தான் பொன்னுசாமி. இது என் வீடுதான்" என்றான். அதைக்கேட்ட அந்த ஆள் தான் கேட்பது உண்மைதானா? தன் எதிரிலே உள்ளவன் புத்திசுவாதீனத்தோடு இருக்கிறானா? என்று சந்தேகப்பட்டு அவனை ஏற இறங்கப் பார்த் தான். அவனும் "நான் தானப்பா பொன்னுசாமி. நீ சந்தேகப் பட வேண்டாம். என்ன சமாச்சாரம் சொல்ல வந் தாயோ அதைச் சொல்" என்றான். அந்த ஆளும் சற்றுக் கோபத்தோடு "என்னை இப்படி அலைய வைத்தீர்களே. நான் உங்கள் சின்னத்தாத்தா வீட்டு வேலைக்காரன். அவர் நேற்று இரவு இறந்து விட்டார். அவருக்கு மகனோ மகளோ இல்லை. அதனால் இறக்கும் முன் அவர் "என் உறவினர்களில் யார் முதலில் வந்து என் உடலுக்குத் தகனக் கிரியைகள் செய்கிறாரோ அவருக்குத்தான் என் சொத்து முழுதும்" என்று கூறிவிட்டு இறந்தார்.

நாங்கள் மூன்று வேலைக்காரர்கள் அவரது சொந்தக் காரர்களிடம் சொல்லக் கிளம்பினோம். சொத்தை அடைபவர் எங்களுக்கு ஏதாவது இனாம் கொடுக்கத்தானே கொடுப்பார். இந்த ஆசையில் நான் வந்தேன். ஆனால் இங்கு நான் வந்து அலைந்து திரிந்ததால் தாமத மாகி விட்டது. இதற்குள் அவரது உறவினர் இன்னொருவர் போய்த் தகனக் கிரியைகளைச் செய்து சொத்துக்களையும் அடைந்து இருப்பார்.


உங்களால் எனக்கு அலைச்சல். உங்களுக்கும் சொத்து கிடைக்காமல் போய்விட்டது" என்றான். அது கேட்டு பொன்னுசாமி "ஐயோ! என் முட்டாள்தனத்தால் வர வேண்டிய சொத்தை இழந்து விட்டேனே. வழக்கம் போல ஏதோ குருட்டு யோசனையில் மூழ்கி உன்னை அலைய வைத்து வேடிக்கை பார்த்துச் சிரிக்க நினைத்தேன்.

இப்போது என்னைப் பார்த்தே சிரிக்கும் நிலை ஏற்பட்டு விட்டதே" என்று கூறி தலையில் அடித்துக் கொண்டான்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்



107

பிறகு அவர்கள் சீதையைத் தேடிச் சென்று பெண்ணை நதியை அடைந்தனர்; தசநவம், உசநவம் என்னும் பெயர்களை உடைய நாடுகளைக் கடந்து விதர்ப்ப நாட்டை அடைந்தனர்; அதற்குப் பிறகு தண்டகாரண்யம், முண்டகத்துறை. பாண்டு மலை, கோதாவரி நதி, சுவணகம் நதி, குலிங்க தேசம், அருந்ததி மலை, மரகத மலை ஆகியவற்றை எல்லாம் கடந்து வேங்கட மலையை அடைந்தனர்; அங்கு தவம் செய்து கொண்டிருந்த அருந்தவ முனிவர் திருவடிகளை வணங்கிப் பின், சான்றோர் நிறைந்த தொண்டை நாட்டை அடைந்தனர். அதன்பின் செந்நெல்லும் பாக்குமரமும் கரும்பும் நிறைந்த காவிரி நாட்டை அடைந்தனர்; அதன் பின் முத்தமிழ் வளர்க்கும் தென் தமிழ் நாடாகிய பாண்டிய நாட்டை அடைந்தனர். அதனையும் கடந்து சுக்கிரீவன் குறிப்பிட்ட மகேந்திர மலையைச் சேர்ந்தனர்.

### சம்பாதியைச் சந்தித்தல்

அங்கதன் தலைமையில் தென்திசை நோக்கி நாலா பக்கமும் அனுப்பிய சேனைகளும் அந்த மகேந்திர மலையை அடைந்தன. கால் கடுக்க நடந்தும் அவை கண்டது, கலக்கமே தவிர கொண்ட இலக்கு அன்று; சீதையைக் காண முடியாதவர்களாய் மனம் நொந்து, வேதனையால் வெந்து, வெதும்பி உள்ளம் சோர்ந்தனர்.

"சீதையைத் தேடி மண் முழுவதும் சுற்றினோம். சுக்கிரீவன் விதித்த காலம் திங்கள் ஒன்றும் கடந்து விட்டது. திரும்பிச் சென்று, இயலாமையை இயம்பினால் சுக்கிரீவன் இறப்பான், இராமனும் உயிர் துறப்பான்; அதனால் அங்கு திரும்பிப் போவதில் பயனில்லை; தோல்வியை ஏற்றுக் கொண்டு இங்கேயே தவம் செய்து காலத்தைக் கழிக்கலாம்; அதுவும் சுமை எனத் தோன்றினால் நஞ்சினை உண்டு உயிர் விடுவோம்" என்று கருத்துத் தெரி வித்தனர்.

அங்கதன், சாம்பவன், அனுமன் மூவரும் 'அடுத்துச் செய்வது யாது?' என்று யோசித்தனர். உயிர் விடுவதே மேல் என்ற கருத்தை மற்றவர் சொல்ல, அனுமன் அதற்கு இசையவில்லை. "சடாயுவைப் போலப் போராடி உயிர் துறப்பதுதான் ஆண்மைக்கு அழகு; செயலற்றுத் தற்கொலை செய்து கொள்வது கோழமைச் செயலாகும்; வீரச் செயலை வேண்டி நின்றவர் வேறு ஒன்றையும் எண்ணிப் பார்ப்பரோ? எலி, தவளைகள் தான் குழிகளில் பதுங்கிக் கொள்ளும்; புலிகளும் யானைகளும் போன்ற நாம், போரிட்டு வீரமரணம் அடைதல்தான் புகழ் மிக்க செயலாகும்" என்று கூறினான்.

இராவணனை எதிர்த்துக் கழுகின் வேந்தனான சடாயு உயிர் விட்டான் என்ற செய்தி அவர்கள் பேச்சில் அடிபட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சேவை செய்வதற்கு உரிய ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காண முடியாது.

– பர்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டில் நேர்மையான ஆட்சியை சிங்கள மக்கள் உருவாக்க வேண்டும்

ரணில் விக்கிரமசிங்கவின் பதவி ஆசை இலங்கையைப் படுகுழியில் வீழ்த்தப் போகிறது.

மகிந்த ராஜபக்ஷ தரப்பின் நேர்மையீனத்தால் இலங்கை குட்டிச் சுவரானது.

அவர்களிடம் இருந்து நாட்டை மீட்பதற்கு சிங்கள மக்கள் நடத்திய போராட்டம் மிகப் பெரும் பிரவாகத்தை எட்டியபோது, அதனை உலக நாடுகள் வியந்து பார்த்தன.

ஊழல், நேர்மையீனம், குடும்ப அரசியல், அடாவடித்தனம் என்பவற்றுக்கு எதிராகத் தன்னெழுச்சியாக இலங்கை மக்கள் நடத்துகின்ற போராட்டம் உலக அரசியலில் ஒரு பெரும் வரலாறாக எழுதப்படவிருந்தவேளை,

நாட்டைக் காப்பாற்றப் போகின்றேன் எனக் கூறியவாறு, பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க மக்களின் எழுச்சிப் போராட்டத்தை வீழ்த்துகின்ற கபடத்தனத்தைச் செய்து முடித்தார்.

ஆம், அரசுக்கு எதிராகக் காலிமுகத்திடலில் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தை உலக நாடுகள் அங்கீகரித்தன.

போராட்டம் நடத்துகின்ற மக்களுக்கு எந்தக் கெடுதலும் ஏற்படக்கூடாது என்பதை உலக நாடுகள் வலியுறுத்தின.

மக்களின் நியாயமான போராட்டம் ராஜபக்ஷ தரப்பைத் திணற வைத்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் பதவி விலகியே ஆக வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகியது.

இதன் முதற்கட்டமாக மகிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவியில் இருந்து வெளியேற்றுவதே மக்களின் நோக்கமாக இருந்தது.

இந்தநேரத்தில்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் காப்பாற்றுகின்ற திட்டத்தை செய்வதற்காக பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார்.

அவர் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றதும் சிங்கள மக்களைத் திசை திருப்பும் வகையில், வெளிநாட்டுத் தூதுவர்கள், உலக வங்கிப் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரையும் சந்தித்து வெளிநாட்டு உதவிகள் வந்து கொட்டப்போவதாக ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அந்தக் கபட நாடகத்தை சிங்கள மக்கள் மட்டுமல்ல அரசியல் தரப்புகளும் நம்பின.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையை பிரதமர் ரணில் தூக்கி நிறுத்தப் போகிறார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைவது போலவும் பெற்றோலின் விலை குறைக்கப்படும் என்பது போலவும் தகவல்கள் பரிமாறப்பட்டன.

ஆனால் இன்றைய நிலைமை என்ன என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நம்பாமல் இலங்கையில் நேர்மையான ஆட்சியை ஏற்படுத்த சிங்கள மக்கள் தயாராக வேண்டும்.

நேர்மையற்றவர்கள் ஆட்சியில் இருந்தால், உலக நாடுகள் உதவி செய்ய முன்வர மாட்டா என்பதைப் புரிந்து கொண்டு சிங்கள மக்கள் உடனடியாகக் களத்தில் இறங்க வேண்டும்.

# பொருளாதார சிதைவை தடுக்க புத்திஜீவிகள் முன்வரவேண்டும்

## மருத்துவர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

புத்திஜீவிகள், புலமைசார் உத்தியோகத்தர்கள் பொருளாதாரச் சிதைவைத் தடுக்கும் வகையில் மக்களுக்குப் பணிபுரிதல் அவசியம் என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பேரிடர் இற்றைக்கு இரு வருடங்களுக்கு முன் ஏற்பட்ட கொரோனா பேரிடருடன் எதிர்வு கூறப்பட்டது. இதற்கு வெறுமனே உள்நாட்டு அரசியல் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புக் காரணங்களை மட்டும் காரணமாகக் கருதாமல் உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையில் அதனை எதிர்கொள்ள உலக வல்லரசுகள் மேற்கொண்ட வர்த்தக, அரசியல் இராணுவ நடவடிக்கைகளும் காரணமாக அமைந்துள்ளன.

இதில் மிகவும் வெளிப்படையானது ரஷ்யா உக்ரையின் மீது மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையாகும். இதனால் மேற்கு உலகின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை மீட்க மேற்கு நாடுகள் வறிய நாடுகளைச் சுரண்டும் நடவடிக்கைகளையே மேற்கொள்ளும்.

எதிர்வரும் மூன்று மாதங்களில் உலகளாவியரீதியில் பொருளாதாரத் தேக்கநிலை ஏற்படும். இந்நிலையில் பல நாடுகளில் பொருளாதார முகாமைத்துவம் இன்மையினால் நிதி நெருக்கடியும், அரசியல் குழப்பங்களும், வன்முறைகளும் ஏற்படும். அத்தகைய சூழ்நிலையினையே இலங்கை தற்போது எதிர்கொள்கின்றது.

எனவே, புத்திஜீவிகள், புலமைசார் உத்தியோகத்தர்கள் பொருளாதாரச் சிதைவைத் தடுக்கும் வகையில் மக்களுக்குப் பணிபுரிதல் அவசியம் என்றார். (நி-18)

## அமைச்சுப் பதவிகளைப் பெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

### சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளை பெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஆளும் கட்சி உறுப்பினர் சாந்த பண்டார ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அமைச்சரவையில் இணைந்து கொண்டிருப்பதை வரவேற்பதாக தெரிவித்ததற்கு பதிலளிக்கையிலேயே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இணைந்து கொள்வது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கை அல்ல.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு, அரசாங்கத்தின் நல்ல தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பதாக தீர்மானித்தோம்.

இதுதொடர்பில் எழுத்து மூலம் அரசாங்கத்துக்கு தெரிவித்திருக்கின்றோம்.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியின் வைத்தியசாலைகளுக்கான மூச்சு வேலைத்திட்டம் ஊடாக வைத்தியசாலைகளில் தட்டுப்பாடாகி வரும் அத்தியாவசிய இரண்டு பொருட்களை பெற்றுக்கொடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சபையில் அறிவித்திருந்தார்.

அத்துடன் ஏற்கனவே இந்த வேலைத்திட்டம் மூலம் நாட்டின் பல வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய மருந்து பொருட்கள் மற்றும் உபகரணங்களை பெற்றுக் கொடுத்து வருகின்றோம்.

என்றாலும் தற்போது எமது கட்சியில் இருந்து சிலரை பெற்றுக்கொண்டு அமைச்சு பதவி வழங்கி இருக்கின்றது. இவ்வாறு கட்சியில் இருந்து சென்றவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்போம் என்றார். (ம-7)

## மன்னார் பொது மருத்துவமனையில் O+ குருதிக்கு தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் $O^+$ வகை குருதிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் செந்தூர்பதிராஜா தெரிவித்துள்ளார்.

தற்போது மாவட்ட பொது மருத்துவமனையில் இரத்த வங்கியில் ஏனைய வகை இரத்தம் காணப்படுகின்றது. எனினும் $O^+$ குருதிக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

எனவே அவசரமாக குறித்த வகையை இரத்த தானம் செய்ய விரும்புகின்றவர்கள் உடனடியாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையை நாடுமாறு அவர் வேண்டுகோள்விடுத்தார்.(4,6,285)

## இலங்கை பயணத்தை ரத்து செய்யுங்கள்

### தமது நாட்டு பிரஜைகளுக்கு தென்கொரியா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான அத்தியாவசியமற்ற பயணங்களை ரத்து செய்யுமாறு தனது பிரஜைகளுக்கு தென்கொரிய அரசு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பில் தென்கொரியா அந்நாட்டு பிரஜைகளுக்கு விசேட பயண ஆலோசனைகள் சிலவற்றை வழங்கியுள்ளது.

அதன்படி, அத்தியாவசியமற்ற அனைத்து பயணங்களையும் ரத்து செய்ய அல்லது ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்குமாறு தென்கொரிய வெளியுறவு அமைச்சகம் தென் கொரிய மக்களுக்கு அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வரும் மக்கள் போராட்டங்கள் மற்றும் வன்முறை சம்பவங்களை கருத்திற்கொண்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




### இறை இன்பத்தை அனுபவிக்க

- ஒரு பக்தனுக்கு வறட்டு விளக்கங்களெல்லாம் அவன் கொண்டுள்ள எண்ணத்தை உறுதிப்படுத்த தேவைப்படுகிறதே தவிர அதற்கு மேல் அவற்றால் எந்தப் பயனுமில்லை. ஏனென்றால் அவன் செல்லும் பக்தி என்னும் இந்தப்பாதை அவனை வெகுசீக்கிரம் தெளிவற்றதும், கொந்தளிப்பு மிக்கதுமான ஆராய்ச்சி நிலைகளைக் கடக்கச் செய்கின்றது. மேலும் இது இறைக்காட்சி பெறும்நிலைக்கு உயர்த்தத் தகுதி வாய்ந்ததாக உள்ளது
- [illegible] செய்த உன்னதநிலையை விரைவில் அடைந்து [illegible]கோ, வலுவிழந்த ஆராய்ச்சிக்கோ இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLEAS பரீட்சை வழிகாட்டல் 2



செல்வரட்ணம் சந்திரராஜா
SLEAS-1

**பரீட்சை ஊடாக தெரிவுக்குள்ளாகுவதற்கு எதிர்பார்த்திருக்கும் அனைவருக்கும்,**

## வினாத்தாள்-1 : கிரகித்தல்

**"கிரகித்தல் வினாத்தாள் தொடர்பில் சுருக்கமாகவும் தெளிவாகவும் விடையளிப்பது எவ்வாறு? என்பது தொடர்பில் கிரகித்தல் வினாத்தாளுக்கேற்ப விளக்க முற்படுவது எனது நோக்கமாகும். அனுபவ அடிப்படையில், இவ் வினாத்தாள் ஒப்பீட்டு ரீதியில், நுண்ணறிவு வினாத்தாளைப் போன்று புள்ளிகளை இலகுவாகப் பெறக்கூடிய ஒன்றல்ல. கிரகித்தல் வினாத்தாளில் பரீட்சார்த்திகளால் வழங்கப்படும் விடைகளுக்கும் மதிப்பீட்டுக்குமிடையில் விடைகள் தொடர்பில் பாரிய இடைவெளிகள் காணப்படக்கூடியதாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே இவ் வினாத்தாளில் தெளிவானதும், எழுத்துப்பிழைகளற்றதும், நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதுமான விடையளிப்பு மிகமிக முக்கியமானதாகும்.**

- இவ்வினாத்தாள், பரீட்சார்த்தி தோற்றுகின்ற மொழி தொடர்பான **கிரகித்தல்** (Comprehension) பற்றியதாகும். தொடர்பாடல் திறன், (Communicaton), சாராம்சப் படுத்துதல், (Summarization), விபரித்தல், (Interpretation), பகுப்பாய்வுத் திறன் மற்றும் படைப்பாற்றல் (Creation) ஆகியவற்றை அளவிடுவதற்காகத் தயாரிக்கப் பட்ட **புறவய வினாக்களைக்** கொண்டதாகும்.
- தரப்பட்ட பந்தியின் மையக் கருத்தினை விளங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பரீட்சார்த்தி கொண்டுள்ளாரா? என்பதைப் பரிசீலிப்பதும், மொழி ஆற்றலைப் பரிசோதிப்பதும் இவ்வினாத்தாளின் நோக்கமாகும். இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கான காலம் 1½ மணித்தியாலங்களாகும். குறித்த காலப்பகுதிக்குள் வினாத்தாளில் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கான விரைவான பயிற்சி அவசியமாகும்.
- பொதுவாக கிரகித்தல் வினாத்தாளில் தரப்படும் வினாக்களோடு தொடர்புடைய பந்திகள் மற்றும் சொற்றொடர்கள் பெரும்பாலும் தரமான சொல்லாட்சியுடையதாகவே தரப்பட்டிருக்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களின் விசேடத்துவம் பெற்ற பாடத்துறையுடன் தொடர்பில்லாத அல்லது அதிகளவுக்குப் பரீட்சயமில்லாத துறைகளுடன் சார்ந்ததாக இருக்கலாம். **மெய்யியல், உளவியல், அறிவாராய்ச்சியியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொருளியல், அரசறிவியல், சமூகவியல், மானிடவியல், தொல்பொருளியல், விளையாட்டு, இலக்கியம் எனப் பல்வேறு துறைகளிலும் தொடர்புபட்டதாக அமைந்திருக்கும்.**

எனவே, இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கான 'கிரகித்தல்' திறனை நேரடியாக எவரிடமும் கற்றுக் கொள்ள முடியாது. கிரகித்தல் திறனை வளர்ப்பதற்கான உபாயங்களையும், விடையளிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நுட்பங்களையும் எடுத்துக் கூறலாம்.

- எதிர்பார்க்கப்படும் வினாக்கள் புறவயமான வினாக்களாக இருக்கும் என்பது அவற்றுக்கு எதிர்பார்க்கப்படும் விடைகளின் தன்மையில் தங்கியுள்ளது. இவ் வினாத்தாள் மிகமிகத் தெளிவானதும், தேவையற்ற அலங்கரிப்புக்களைக் கொண்டிராததும், வரையறுக்கப்பட்ட சொற்களில் அல்லது வாக்கியங்களில் வெளிப்படுத்தும் வகையிலான விடைகளை எதிர்பார்க்கின்றது.
- **இவ்வினாத்தாளில் இதுவரை கடந்த கால வினாத்தாள்களைப் பின்பற்றியதாகவோ அல்லது வினா அமைப்புக்கள் மாறுபட்ட வகையிலோ அமைந்து வரலாம்.**

(i) **தரப்பட்ட பந்தியைக் கிரகித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையினை எழுதுதல்.**

- முதலில் வினாக்களைக் கவனமாக வாசிக்க வேண்டும்.
- **பின்னர் பந்தியை வாசிக்கும்போது அவ்வினாக்க**ளோடு தொடர்புபடும் சந்தர்ப்பங்களை இனங்காண வேண்டும்.
- வாசிக்கும் போது தேவைக்கேற்றவாறு மிகச் சுருக்கமாகக் குறிப்பெடுக்கவும்.
- பொருத்தமான விடையை இனங்கண்டு குறிப்பிட வேண்டும்.

(ii) **தரப்பட்டுள்ள பந்தியின் மையக் கருத்தினை ஒரு வாக்கியத்தில் எழுதுதல். - இது தொடர்பில் பின்வரும் விடயங்களை மனங்கொள்ள வேண்டும்.**

- தரப்பட்ட பந்தியை மிகச் சரளமாக வாசித்து அதில் கூறப்பட்டுள்ள பிரதான விடயம் யாது என்பதை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.
- அமைக்கப்படும் தனி வாக்கியம் எழுவாய், பயனிலை உள்ளடக்கிய அர்த்தமுடைய வாக்கியமாக அமைய வேண்டும்.
- பந்தியின் மையக் கருத்து மாறக் கூடாது.
- குறித்த வாக்கியம் தெளிவான தொடர்ச்சித் தன்மையைப் பெற்றிருக்க வேண்டும்.
- இரண்டு பந்திகளோ அல்லது இரண்டு வாக்கியங்களோ தரப்படினும், சுயமான ஒரு வாக்கியமாகவே எழுதப்பட வேண்டும். பந்திக்கொரு வாக்கியம் என எழுதக்கூடாது.

(i), (ii) ஆகியன ஒன்றிணைந்த வினாக்களாகவோ, தனியாகவோ தரப்படலாம்.

(iii) **அடையாளப்படுத்தப்பட்டுள்ள சொல் அல்லது சொற்றொடர் தொடர்பான விளக்கத்தினைப் பந்தியின் பொருளுக்கேற்ப விளக்குதல்.**

- அடையாளப்படுத்தப்பட்டுள்ள சொல் அல்லது சொற்றொடர் தொடர்பில் விளக்கமளிக்கும்போது குறித்த பந்திக்கமைவாக **இடம்சார் கருத்துப் பெறும் வகையில்** அமைக்க வேண்டும்.

**பல்துறைசார் சொல்லாளுகை தொடர்பில் தனியான விளக்கம் நேரடி அறிவுறுத்தலில் வழங்கப்படும். கிரகித்தல் வினாத்தாளில் ஒரு தடவை தரப்பட்ட வினாவோ, பந்தியோ, சொல் அல்லது சொற்றொகுதியோ மீண்டும் தரப்படுவதில்லை என்பதைக் கவனத்திற் கொள்க.**

**உதாரணமாக, கீழேதரப்பட்டுள்ள 4 வாக்கியங்களிலும் தரப்பட்டுள்ள தடித்த எழுத்திலுள்ள சொல்/சொற்றொகுதி தொடர்பில் விளக்கத்தைச் சரியாக வழங்க முற்படுக.**

- ■ உளப் பண்புகளையும், திறன்களையும் அளந்தறிவதற்கு இன்றுவரை அமைக்கப்பட்டுள்ள பல்வேறு சோதனைகள் அனைத்தும் **புறவயத் தன்மை வாய்ந்தவை** என நாம் கருத முடியாது.
- ■ ஆய்வாளர்கள் தாம் பயன்படுத்தும் சோதனைகளில் **அகவயக் காரணிகளின் குறுக்கீடு** குறைக்கப் படுவதற்கு உதவக்கூடிய முன்னேற்பாடுகளைச் செய்து கொள்வது அவசியமானதாகும்.
- ■ சமூகத்தில் பல்வேறு குழுக்களிடையே எழும் போராட்டங்களுக்கு **சார்பெண்ணங்கள்** பெருமளவு காரணங்களாகும் என சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.
- ■ சமூக விஞ்ஞான ஆய்வாளர்கள் **முற்கோட்டங்களைப் பயன்படுத்துவதைத்** தமது ஆய்வுகளின்போது தவிர்க்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(iv) **உரைப்பகுதி ஒன்றினை வழங்கி அதற்குப் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்தல். அல்லது உரைப்பகுதியின் மையக்கருத்துப் பற்றிய மதிப்பீடு.**

- இவ்வாறான வினாக்களில், குறித்த ஒரு பந்தி தரப்பட்டு அதனை முறையாகக் கிரகித்து அதில் குறிப்பிடப் படும் **பிரதான பிரச்சினை அல்லது கருத்து எதுவென்பதை அறிந்த பின்னர்** அதன் கீழே தரப்பட்டிருக்கும் மூன்று கூற்றுக்களில் பந்தியுடன் நன்கு பொருந்தக்கூடிய விடையைத் தெரிவு செய்து வினாவினதும், விடையினதும் இலக்கத்தினை எழுதுமாறு கேட்கப்படும்.

(v) **தரப்பட்ட பந்தியொன்றிலிருந்து அனுமானிக்கக் கூடிய முடிவு (கூற்று) தொடர்பில், தரப்பட்டுள்ள மாற்று விடைகளிலொன்றைத் தெரிதல். உண்மை, பொய், சந்தேகம் அல்லது கூற முடியாது ஆகிய மூன்று மாற்று விடைகளிலொன்றுக்கு வருதல்.**

- இவ்வாறான வினாக்களுக்கு விடையளிப்பதில் முறையான பயிற்சியினைப் பெற்றிருக்க வேண்டும்.
- தரப்பட்டது ஒரு பந்தியாகவோ அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தரவுகளாகவோ இருக்கலாம். இவற்றிலிருந்து முடிவு (கூற்று) தொடர்பில் கவனமாக அணுக வேண்டும்.
- தரப்பட்ட பந்தியிலுள்ள தரவுகளுக்கு அமைவாக ஒவ்வொரு கூற்றும் ... தொடர்பில் **உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.**
- பந்தி எது பற்றியதாகவும் இருக்கலாம். அதுபற்றி உங்களுக்கு முன்னறிவு இல்லாமலும் இருக்கலாம். உண்மையில் இவ்வாறான வினாக்களில் பரீட்சார்த்தியின் **கிரகித்தல் சார்ந்த நியாயித்தல் முறைமை** மதிப்பிடப் படுகிறதே ஒழிய நீங்கள் கற்றுள்ள அறிவைப் பரீட்சிக்கும் நோக்க அடிப்படை இல்லை என்பதையும் கவனிக்கவும்.
- *இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது பொதுவாகப் பின்வரும் அடிப்படைகளைப் பின்பற்ற வேண்டும்.*
- ***உண்மை/ஆம் :*** *கூற்றானது பந்தியில் தரப்பட்டுள்ள தகவல்களைத் தர்க்க ரீதியாகத் தொடரும் எனின் 'உண்மை' என்ற முடிவுக்கு வரவேண்டும்.*

*ஒரு **கூற்று** உண்மையென முடிவு செய்வது, தரப்பட்ட பந்திக்கமைவாக **இரு வழிகளில் அமையலாம்.** அவற்றைத் தெளிவாக இனங்கண்டு எழுத வேண்டும்.*

- ***பொய் / இல்லை :*** *கூற்றானது பந்தியில் தரப்பட்டுள்ள தகவல்களைத் தர்க்க ரீதியாகத் தொடராவிடின் 'பொய்' என்ற முடிவுக்கு வரவேண்டும். (முரண்பாடு-சொல்/சொற்றொடர்/சாத்தியமற்ற — **ஊகிப்பு** - அனுமானம் - கூற்று)*
- ***கூற முடியாது :*** *பந்தியில் தரப்பட்டுள்ள தகவல்களை மாத்திரம் வைத்து குறித்த கூற்றினைப் பெற முடியாது எனின், 'கூற முடியாது' என்ற முடிவுக்கு வரவேண்டும்.*

***(இவை தொடர்பான விளக்கங்கள் நேரடிக் கலந்துரையாடலில் விரிவாகத் தரப்படும்.)***

மிக விரைவாகத் தரப்பட்ட காலத்துக்குள் விடைகளை முடிவுறுத்த வேண்டும். மேலும் விடையுடன் காரணமும் கேட்கப்படின், உரியவாறு தர்க்க நியாயத்தைக் குறிப்பிட வேண்டும்.

**கிரகித்தல் வினாத்தாளை அணுகுவதற்கு கவனிக்க வேண்டிய பொதுவான விடயங்கள் :**

- விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளுதல்.
- காலம் தொடர்பில் (Duration) கவனம் செலுத்துதல்.
- தரப்பட்ட பந்தியின் அமைப்பினை அறிதல். முக்கிய சொற்களை அடையாளம் காண வேண்டும். பரீட்சார்த்தி **சொல்லாளுகையைச் சரியாகப் பிரயோகிக்க வேண்டும். பந்திகளில் கையாளப்படும் சொல் அல்லது சொற்றொகுதி விளங்காவிடின் விடை தவறாகி விடும்.** இது பரீட்சார்த்தி சுயமாகத் தனது பல்துறைசார் வாசிப்பின் ஊடாக மட்டுமே விருத்தி செய்து கொள்ள முடியும்.
- வினாவை விளங்கிக் கொள்ளுதல். மிக வேகமாக மூன்று முறை வாசிக்கவும். வேகமும் விளங்கும் திறனும் ஈடுபாடும் மிக அவசியம். வாசிப்பின்போது வரிவரியாக வாசிக்கவும். (கதைப் புத்தகம் வாசிப்பது போலல்ல). விடை எங்குள்ளது என அறிவதற்காக வினாவை மனதில் வைத்து வாசிக்க வேண்டும். பந்தியின் போக்கு, அமைப்பு, பிரதான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவும். எனவே **முதலில் வினாக்களை வாசிக்கவும்.** பின்னர் பந்திக்குச் செல்லவும்.
- சுருக்கமாக்கும் போது மிக அற்பமான அல்லது சிறிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கத் தேவையில்லை. **பிரதான கருத்தே முக்கியம்.** உதாரணங்களிலும் விளக்கங்களிலும் அதிகளவு கவனம் தேவையில்லை.
- வினாக்களுக்கு விடையளிக்கும்போது, சரியான விடை பந்திக்கு வெளியில் வருமா? பந்திக்கு அப்பால் சிந்திக்க வேண்டி ஏற்படுமா?
- குழப்பமான, தூண்டுகின்ற வார்த்தைகளைப் பெரிதும் கவனிக்கத் தேவையில்லை.
- வாசிக்கும் போது தேவைக்கேற்றவாறு மிகச் சுருக்கமாகக் குறிப்பெடுக்கவும்.
- வாசித்துக் கொண்டிருக்கும் போதே தமது முன்னறிவு, பகுப்பாய்வு ஆற்றலுக்கேற்ப முன்கூட்டியே வினாக்களைத் தீர்மானித்துக் கொண்டே விடையளித்தலை இலகுபடுத்தலாம்.
- தொடக்க, இறுதிப் பந்திகளில் கூடிய கவனம் செலுத்துதல்.
- பரீட்சார்த்தி வினாத்தாளைப் பார்த்துக் குழப்பமடையக் கூடாது பொறுமையின்மையும், அவசரப்படுவதும் விடையளிக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தும். ஏனெனில் பரீட்சையின் பிரதான பிரச்சினை படிப்பது மட்டுமல்ல, இவ்வாறான நிலைகளுக்குட்படாதிருத்தலும் மிகமிக முக்கியமாகும். இவ்வினாத்தாள் 1½ மணி நேரத்துக்குட்பட்டது என்பதால் உங்கள் கவனத்தை மனக்குழப்பமின்றிக் கையாள வேண்டும். நேரத்தை அடிக்கடி பார்க்கத் தேவையில்லை. வினாத்தாளைப் பார்த்துப் பதற்றப்பட வேண்டியதில்லை. வினாத்தாளைப் பெற்றவுடன் முதலாம் வினாவைத் தான் பார்க்க வேண்டுமென்றுமில்லை. பொதுவான பார்வை ஒன்றினை வினாக்களின் மீது முதலில் செலுத்த வேண்டும். **அமைதியாகவும் முடிந்தவரை விரைவாகவும் உங்கள் பயிற்சியையும், அனுபவத்தையும் பரீட்சை மண்டபத்தில் முன்னிறுத்திச் செயற்பட வேண்டும்.** இவற்றை இவ்விடத்தில் கூறுவதற்குக் காரணம், பலர் **வினாக்களுக்கு சரியாக விடையளிக்க முடியாமல் போவது இவ்வாறான பதற்ற நிலையினால் தான்** என்பதற்காகவே இங்கு குறிப்பிடுகிறேன்.
- **விளக்க வகுப்புக்கள் மூலம் அனைத்து விடயங்கள் தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.**

**"வாசிக்க வேண்டும் என்பதற்காக வாசிப்பதல்ல; கிரகிப்பதற்காக வாசிக்கப்பட வேண்டும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.ஆரியகுளத்...

யாழ்ப்பாணம் ஆரியகுளத்திற்கு வருகை தரும் மக்களை மகிழ்விக்க படகு சவாரி நடைமுறைக்கு வருகின்றது. அதன் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது

இதனை யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

மாநகர ஆணையாளர் வ.ஜெயசீலன் உள்ளிட்ட மாநகர உறுப்பினர்கள், ஊர் மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,104)

## எரிவாயு சிலிண்...

வீதமான எரிவாயு சிலிண்டர்களை கொழும்பு மற்றும் கம்பஹா போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளுக்கு விநியோகிக்குமாறு லிட்ரோ நிறுவனத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## விவசாயத்...

ஹம்டி, ஐக்கிய நாடுகள் சபையின் கிளைக் கட்டமைப்புக்களான உணவு மற்றும் விவசாய அமைப்பு, உலக உணவுச் செயற்றிட்டம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு அவசியமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக குறித்த பிரதிநிதிகள் பிரதமரிடம் உறுதியளித்துள்ளனர்.

இலங்கையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் "போசணை மட்டம் ஆகியவற்றை விரிவுபடுத்துவதற்கும் அவசியமான சர்வதேச உதவிகள் தொடர்பில் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி இலங்கையில் விவசாயத்துறையை மீண்டும் வலுப்படுத்துவதை முன்னிறுத்திய ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகள் ஐ.நா உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் ஐ.நா உலக உணவுச்செயற்றிட்டம் ஆகியவற்றின் ஊடாக வழிநடத்தப்படும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, தற்போது பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கையில் விவசாயத்துறையை வலுப்படுத்துதல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல் ஆகியவற்றை முன்னிறுத்தி ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக உறுதியளித்துள்ளது. (ம-7)

## பாராளுமன்றில்...

யாப்பா அபேவர்த்தன பாராளுமன்றில் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் மதியபோசனத்தை நிறுத்துமாறு கோரி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 53 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் சபாநாயகருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்துக்கு பதில் அளிக்கும் வகையில் சபாநாயகர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (ம-7)

## நாமல் ராஜபக்ஷ...

மணியளவில் அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியிருந்தார். (ம-7)

## கட்சியிலிருந்து...

கின்றது.

மேலும் இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஹரீன் பெர்னாண்டோ சுற்றுலா மற்றும் காணி அமைச்சராகவும் மனுஷ நாணயக்கார தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 9 பேர்...

பிரதமர் ரணில் தலைமையிலான அரசில் மேலும் 9 பேர் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர்களாக சத்தியப் பிரமாணம் செய்தனர்.

அந்தவகையில் நிமால் சிறிபால டி சில்வா துறைமுகம் கப்பல்துறை மற்றும் விமானத்துறை அமைச்சர், சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சர், கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சர், விஜயதாஸ ராஜபக்ஷ நீதி, சிறைச்சாலைகள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், ஹரீன் பெர்னாண்டோ சுற்றுலா மற்றும் காணி அமைச்சர், ரமேஷ் பத்திரண கைத்தொழில் அமைச்சர், மனுஷ நாணயக்கார தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர், நளீன் நாவ ஜீவ பெர்னாண்டோ வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சர், டிரான் அலஸ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆக பதவிப் பிரமாணம் செய்துள்ளனர். (ம-7)

# ஓமந்தை எரிபொருள் நிலையத்தில் முரண்பாடு

(வவுனியா)

வவுனியா ஓமந்தை எரிபொருள் நிலையத்தில் எரிபொருளுக்குக் காத்திருக்கும் மக்களுக்கும் ஊழியருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் தடைப்பட்டபோது எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டதாகவும் நாளை (இன்று) எரிபொருள் விநியோகம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதால் நீண்ட நேரம் காத்திருந்த மக்களுக்கும் ஊழியருக்கும் இடையே வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.

போக்குவரத்துப் பொலிஸார் தலையிட்டு ஊழியரையும் பொதுமக்களையும் சமாதானப்படுத்தி, மின்சாரம் வழமைக்குத் திரும்பியதும் எரிபொருள் வழமை போன்று விநியோகிப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொதுமக்கள் அமைதிக்குத் திரும்பினர். (ம-7,299)

## முன்னுரிமை...

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் பல தரப்பினரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன், பல இன்னல்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த இரு தினங்களாக பெருமளவானோர் எரிபொருளுக்காக வரிசைகளில் காத்து நிற்கின்றனர். அதனால், வைத்தியசாலை பணியாளர்களும் எரிபொருள் இன்மையால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையிலேயே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா, மாவட்ட அரச அதிபரிடம் "வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்குவதில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7,33)

## இனி ஒருபோதும்...

லைக் காண நாங்கள் பாராளுமன்றத்திற்குள் நுழையவில்லை. இனி ஒருபோதும் இங்கு திரும்பி வரமாட்டேன்." என்று கடுமையாகச் சாடினார்.

இதன் போது மேலும் உரையாற்றிய அவர்,

"நான் வாதம் செய்ய வரவில்லை. மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடவே வந்தேன். நாட்டில் நெருக்கடியை உருவாக்கி ஒருவரையொருவர் நோக்கி விரலை நீட்ட முயற்சித்தால் அந்த விரலை வெற்றி வரலாறு வரை நீட்ட வேண்டும்.

இந்த நேரத்தில் செய்ய வேண்டியது, ஒருவரையொருவர் விமர்சித்துக் கொள்வதை விடுத்து, நாட்டின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதே.

பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்கும் முன்னர் 42 மில்லியன் ரூபாயை அரசாங்கத்திற்கு வருமான வரியாக செலுத்தியுள்ளேன். பொதுப் பணத்தை ஒருபோதும் அபகரிக்கவோ, திருடவோ இல்லை" என்றார். (ம-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3003 — சீட்டிழுப்பு திகதி 20.05.2022 — அச்சிடப்பட்டுள்ள திகதி 13.05.2022 — ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 15 55 61 73 — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 13/05/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1109 — வெற்றி எழுத்து X — சுப்பர் இலக்கம் 01 — வெற்றி இலக்கங்கள் 16 17 71 74

ஹதஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — அச்சிடப்பட்ட திகதி 2022.05.13 — சீட்டிழுப்பு திகதி 20.05.2022 — சீட்டிழுப்பு இலக்கம் 070 — கன்னி 13 24 32 40 கன்னி — தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத — சீட்டிழுக்கப்பட்ட திகதி 2022/05/20 — அச்சிடப்பட்ட திகதி 2022/05/13 — சீட்டிழுப்பு இலக்கம் 4761 — Q 6 6 0 8 5 8 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2022.05.13 — சீட்டிழுப்பு இலக்கம் 791 — H 33 41 45 55 — ஆங்கில எழுத்து — வெற்றி இலக்கங்கள்

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1738 — நிறம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2022.05.13 — தினம் வெள்ளிக்கிழமை — I 16 17 18 65 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,327,640/-

சனிதா — வெள்ளிக்கிழமை — சீட்டிழுப்பு திகதி : 2022.05.13 — சீட்டிழுப்பு இல : 3899 — வர்ணம் : செம்மஞ்சள் — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,442,040/- — வெற்றி இலக்கங்கள் 14 32 58 62 — ஆங்கில எழுத்து Y

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 170 — சீட்டிழுப்பு திகதி 2022.05.13 — வெள்ளிக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 07 09 45 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,869,940/-

ராசி — சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்படவுள்ளது ரூ. 4,941,484/- — திகதி 2022-05-13 — வெற்றி வாரம் 3450 — வர்ணம் நீலம் — வெற்றி இலக்கங்கள் 24 49 59 61 — ரிஷபம் — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 12,710,924/-

லக்ன வாசனா 12 — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — F 23 07 28 37 65 — சீட்டிழுப்பு வாரம் 914 — வர்ணம் ஊதா — திகதி 2022.05.13 வெள்ளிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 237,343,939/- — தொலைபேசி 011-2 333 546-47 — Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — சீட்டிழுப்பு இல : 1564 — வர்ணம் : ஊதா — சீட்டிழுப்பு திகதி 2022.05.13 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,416,400/- — வெற்றி இலக்கங்கள் 05 16 17 65 — ஆங்கில எழுத்து D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு


## யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு

### நிலப்பரப்பு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்

01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)

- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.




(11417)

**பார்வையிடும் நேரம்**
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை


தொடர்பு

**077 623 4204, 077 288 0152, 076 658 3621**

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் புத்தூரில் 193 பரப்புக் காணி விற்பனைக்கு ( மேட்டுநிலம் )

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ km தூரம்.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் அம்மன் கோவில் செல்லும் காபெட் வீதியில் பிரதான வீதியிலிருந்து 200m தூரம்.
- வீடு கட்டுவதற்கும் கால்நடை பண்ணை அமைப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் உகந்த இடம்.
- அயலில் குடியிருப்புகள் உள்ள நல்ல சூழல்.
- 5 பரப்பாகவும் 10 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- புத்தூர் மட்டுவில் வீதியில் பிரதான நீர்த்தாங்கி அருகாமையில்.
- நல்ல தண்ணீரூற்று.




**பார்வையிடும் நேரம்**
காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**1 பரப்பின் விலை 150, 000/=**
ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்

(11417)

தொடர்பு

**074 291 3725, 074 291 3726, 074 291 3727**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.